**an International CBSE Finger Print School**
**Coimbatore**

தமிழ் – இயல் 1 தமிழ்மொழி வாழ்த்து

QUESTION BANK

சிறுவினா

1. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

- தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க!
- ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க!
- ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க!
- எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க!
- எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்!
- அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைக!
- பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க!
- தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க!
- வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

சிந்தனை வினா

1. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

- தமிழ்மொழி எண்ணற்ற இலக்கிய இலக்கண வளங்களைக் கொண்ட மொழியாகும்.
- தமிழ்மொழி அழியாத மொழியாகவும், சிதையாத மொழியாகவும், என்றும் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே மொழியாகும்.
- தமிழ்மொழி மிகப்பழமையான, வளமையான மொழி ஆகும். தமிழ்மொழி சொல்வளம், கருத்து வளம், பண்பாட்டு வளம் நிறைந்த மொழியாகும்.
- எனவேதான், இத்தகைய வளமுடைய மொழியாக விளங்குவதால்தான், தமிழை பாரதியார் வண்மொழி என்று அழைக்கிறார்.